பக்கங்கள் 18+5

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 வைகாசி 32 வெள்ளிக்கிழமை 14.06.2024 அதிர்வு 319

## ஆகஸ்ட்டில் மோடி இலங்கை விஜயம்



இந்தியாவில் மூன்றாவது முறையாகப் பிரதமராகப் பதவியேற்றுள்ள நரேந்திர மோடி எதிர்வரும் 04



# கோமாளிக் கூத்து ஆடும் சஜித்; ரணிலை ஆதரிப்பதே ஒரே வழி

## ஐ.தே.கவின் முக்கியஸ்தர் ஆஷு மாரசிங்க தெரிவிப்பு

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் தேர்தல் கால பிரசாரக் கருத்துக்கள் கவலையளிக்கின்றன என்று தெரிவித்த ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தருமான ஆஷு மாரசிங்க, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் கோமாளிக் கூத்து ஆடும் சஜித்துக்கு ஆதரவளித்து பயனில்லை என்றும், ரணிலுக்கு ஆதரவளிப்பதே சிறந்தது என்றும் குறிப்பிட்டார்.

கொழும்பில் இன்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 04

# மருத்துவத்துறைக்குத் தெரிவான மாணவன் நீலகிரி ஆற்றில் மூழ்கிப் பரிதாப உயிரிழப்பு!



## சோகத்தில் மூழ்கியது காரைதீவு பிரதேசம்

(வி.ரி. சகாதேவராஜா)

அம்பாறை, காரைதீவைச் சேர்ந்த சிவகரன் அக்சயன் (வயது 20) என்ற மாணவன் இன்று காலை நீரில் மூழ்கிப் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

சிவகரன் – ஜீவரஞ்சனி தம்பதியினரின் ஒரேயொரு பிள்ளை அக்சயன் ஆவார்.

காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியில் இம்முறை மருத்துவத் துறைக்குத் தெரிவான இரண்டு மாணவர்களுள் அக்சயன் ஒருவராவார்.

இவர் அண்மையில் வெளியான 2023 (2024) ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்று அம்பாறை மாவட்டத்தில் 23



ஆவது இடத்தில் மருத்துவத்துறைக்குத் தெரிவாகியிருந்தார். 04



# புலம்பெயர் தமிழர்களிடம் அடிபணிந்துவிட்டார் சஜித்

## இப்படி மொட்டுக் கட்சி புலம்பல்

"தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆயுதம் மற்றும் பணம் வழங்கி ரணசிங்க பிரேமதாஸ அன்று செய்த தவறின் இரண்டாம் பாகத்தை, 13 பிளஸ் எனக் கூறி இன்று செய்வதற்கு அவரின் மகனான சஜித் பிரேமதாஸ முற்படுகின்றார்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி விமர்சித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் நிலையில் சஜித் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களிடம் அடிபணிந்துவிட்டார் போலும் என்றும் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"புலிகள் அமைப்பால் பொலிஸார் கொலை செய்யப்பட்ட கொடூரமான நாள் நேற்றாகும். அப்போது ஜனாதிபதியாக இருந்த ரணசிங்க பிரேமதாஸவால் எடுக்கப்பட்ட சில தவறான முடிவுகளாலேயே இந்த அநியாயம் ஏற்பட்டது.

அன்ரன் பாலசிங்கம் உள்ளிட்ட புலி உறுப்பினர்களை அன்று கொழும்புக்கு அழைத்து வந்து, பேச்சு நடத்தி ஆயுதங்கள் மற்றும் நிதி என்பன புலிகள் அமைப்புக்கு வழங்கப்பட்டன. இராணுவத்தினர் முகாம்களுக்கு அனுப்பட்டனர். அப்போதுதான் நிராயுதபாணியாக இருந்த 700 பொலிஸார் கொல்லப்பட்டனர்.

சஜித் பிரேமதாஸ யாழ்ப்பாணத்துக்குச் சென்று, 13 பிளஸ் அமுல்படுத்தப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார். 13 பிளஸ் என்றால் என்ன என்பது குறித்து அவருக்குத் தெளிவு உள்ளதா எனத் தெரியவில்லை.

ஜே.ஆர். ஜயவர்தன 13 ஐ கொண்டு வந்திருந்தாலும் 13 ஐ முழுமையாக அமுலாக்கவில்லை. அரச பிரதிநிதியாக ஆளுநர் செயற்பட்டார். அதன்பின்னர் பிரேமதாஸ, சந்திரிகா, டி.பி. விஜேதுங்க, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் ஜனாதிபதிப் பதவிக்கு வந்திருந்தாலும் 13 ஐ முழுமையாக அமுல்படுத்துவதில் உள்ள பாரதூரத்தன்மையால் அதனைச் செயற்படுத்தவில்லை.

ஆனால், சஜித் பிரேமதாஸ தற்போது 13 பிளஸ் எனக் கூறுகின்றார். மாகாணங்களில் பொலிஸ் கட்டமைப்பு உருவாகினால் என்ன நடக்கும்? சஜித் ஜனாதிபதியாகி அவர் கூறியதைச் செய்தால், அன்று ரணசிங்க பிரேமதாஸ படையினரை நிராயுதபாணியாக்கிய முடிவை விடவும் பயங்கரமானதாக அமையும்.

தேர்தலுக்கு முன்னரே இதைக் கூறியது நல்லம். அப்போது மக்களுக்கு முடிவொன்றை எடுக்க முடியும். பிரேமதாஸ நாட்டுக்கு பல நல்லவிடயங்களை செய்தார். ஆனால், அமைதிப் பேச்சுக்குச் சென்று முழு நாட்டையும் நாசமாக்கினார். இறுதியில் குண்டுத் தாக்குதலில் அவரும் கொல்லப்பட்டார்.

மஹிந்த ராஜபக்ஷவின் புண்ணியத்தால் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. ஆனால், புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் இன்னும் உள்ளன. தமது இலக்கை அடைவதற்கு உலகில் பல நாடுகளில் அவை செயற்படுகின்றன. தேர்தல் நெருங்கும்வேளை அந்த அமைப்புக்களுக்குச் சஜித் அடிபணிந்துவிட்டார்போலும். எனவே, முக்கியத்துவமிக்க – நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கின்ற பிரச்சினைகளின்போது சஜித் சிந்தித்துச் செயற்பட வேண்டும்." – என்றார்.

# வடமராட்சியில் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர் சிக்கினார்!

யாழ்ப்பாணம், வடமராட்சி பகுதியில் நீண்ட காலமாக கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர், நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வடமராட்சி, கற்கோவளம் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றார் என்று பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில், மேற்படி இளைஞரைச் சில நாட்களாகத் தொடர்ந்து கண்காணித்து வந்த நிலையில், நேற்று கஞ்சாவை விற்பனைக்காக எடுத்துச் சென்றபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இளைஞரின் உடைமையில் இருந்து 2 கிலோ 300 கிராம் கஞ்சாவையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.



சந்தேகநபரை நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# இரகசிய சுரங்கப்பாதை சிலாபத்தில் கண்டுபிடிப்பு

(ஐ. ஏ. காதிர்கான் )

சிலாபம் – ஜேம்ஸ் வீதியில் மேற்கொள்ளப்பட்ட அவசர அகழ்வாராய்ச்சியின் போது, பழைய சுரங்கப் பாதையின் எச்சங்கள் கண்டுபிடிக் கப்பட்டுள்ளன.

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் ஊழியர்கள் குழுவொன்று, பராமரிப்பு நோக்கத்துக்காக அவசர அகழ்வை மேற்கொண்ட போதே, இந்த சுரங்கப்பாதையின் எச்சங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

சுரங்கப் பாதைக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் செங்கல் சுவரின் ஒரு பகுதியும், தோண்டப்பட்ட இடத்தில் மிகத் தெளிவாகக் காணப்பட்டது என்று ஊழியர்கள் தெரிவித்தனர்.

தற்போதைய சிலாபம் மாவட்ட நீதிமன்றம் அமைந்துள்ள கட்டடம், டச்சு காலத்தில் சிறைச் சாலையாகப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப் படுகிறது.

அந்தச் சிறைச்சாலையில் இருந்து சிலாபம் துறைமுகம்வரை இரகசிய சுரங்கப்பாதை இருந்ததாக, தொல்லியல் பதிவுகள் இருப்பதாக, தொல்லியல் மற்றும் வரலாற்று ஆய்வாளர் டேவிட் கயான் இந்திக்க தெரிவித்துள்ளார்.

இந்தச் சுரங்கப்பாதையின் பாகங்கள், இதற்கு முன்னரும் பல இடங்களில் கண்டெடுக் கப்பட்டன. ஆனால் இது தொடர்பாக முறையான அகழ்வாராய்ச்சி எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.





# ‘மஹிந்த சூறாவளி’ ஆரம்பமான இடத்தில் 18இல் விமல் அணியின் ஆட்டம் ஆரம்பம்



தெற்கில் அண்மையில் உருவாக்கப்பட்ட சர்வஜன அதிகாரம் எனும் அரசியல் கூட்டணியின் முதலாவது மக்கள் கூட்டம் எதிர்வரும் 18 ஆம் திகதி நுகேகொடையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தின்போது மேலும் சில தேசிய வாத அமைப்புகளும், கட்சிகளும் மேற்படி கூட்டணியுடன் இணையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சர்வஜன அதிகாரத்தின் நிலைப்பாடும் இதன்போது தெளிவுபடுத்தப்படவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, தொழில் அதிபர் திலித் ஜயவீர உள்ளிட்டவர்கள் இந்தக் கூட்டணியில் இடம்பெற்றுள்ளனர். சிங்கள தேசிய வாத அமைப்புகளும் இணைந்துள்ளன.

கோட்டாபய ராஜபக்ஷவின் வியத்கமவில் இருந்த உறுப்பினர்களும் இந்தக் கூட்டணியில் இடம்பெற்றுள்ளனர்.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்த பின்னர், மஹிந்தவின் எழுச்சிப் பயணம் நுகேகொடையில் இருந்தே ஆரம்பமானது. மஹிந்த சூறாவளி எனும் தொனிப்பொருளின் கீழ் முதலாவது மக்கள் கூட்டம் மஹிந்த தலைமையில் நுகேகொடையில் இருந்துதான் ஆரம்பமானது என்பது குறிப்பிடத்தக்கது.

# உத்திகவின் கார் மீது துப்பாக்கிச்சூடு: அவரே தாக்குதலுக்குத் திட்டமிட்டாராம்

## விசாரணைகளில் வெளியானது அதிர்ச்சித் தகவல்

அனுராதபுரம் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்னவின் கார் மீது இலக்கு வைத்து கடந்த வருடம் டிசம்பர் மாதம் 17ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு தாக்குதல் அவர் மூலமாகவே திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உத்திக பிரேமரத்னவும், குறித்த பிரதேசத்தின் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரும் இணைந்து இந்தத் தாக்குதலைத் திட்டமிட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால்



தல்தூவ தெரிவித்தார்.

இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது இந்த விடயங்கள் தெளிவாகியுள்ளன.

இந்நிலையில், துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் அத்தியட்சகர் தற்போது நாட்டை விட்டு வெளியேறியுள்ளார் எனவும், அவர் மற்றுமொரு பொலிஸ் உத்தியோகத்தரிடம் தனது துப்பாக்கியை ஒப்படைத்துள்ளார் எனவும் தெரியவந்துள்ளது.

எவ்வாறாயினும், இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

உத்திக பிரேமரத்ன தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜிநாமா செய்து விட்டு தற்போது தனது குடும்பத்துடன் கனடாவுக்குச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### கோமாளிக் கூத்து...

“கடந்த தேர்தல் காலங்களின்போது எவ்வாறு பிரசார நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் என சஜித் பிரேமதாஸ எங்களிடம் கேட்டுள்ளார். ஏதேனும் பிரதேசம் ஒன்றுக்குச் செல்லும்போது அவர் உதவி கோருவார்.

நானும் அதற்கான அறிவுரைகளை வழங்கியுள்ளேன். இதற்கான வட்ஸ்அப் ஆதாரங்கள் என்னிடம் உள்ளன. அவர் இல்லையென மறுக்க முடியாது. நாங்கள் ஒன்றாக இணைந்து பணியாற்றியுள்ளோம்.

இவ்வாறிருக்க அவரது அண்மைய யாழ்ப்பாணம் விஜயத்தின்போது அவருடைய கருத்துக்கள் உண்மையாகவே கவலையளிக்கின்றன.

அவர் அவசர அவசரமாக ஜனாதிபதியாக நினைத்தால் கோட்டாபய வெளியேறிய காலத்துக்கு முன்னதாகவே வெளியேற நேரிடும்.

எனவே, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் கோமாளிக் கூத்து ஆடும் சஜித்துக்கு ஆதரவளித்துப் பயனில்லை. தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குவுக்கு ஆதரவளிப்பதே சிறந்தது.” – என்றார்.

### மருத்துவத்துறைக்கு...

அவர் தனது குடும்பத்தோடு மூன்று நாட்களுக்கு முன்பு உகந்தமலை முருகன் ஆலயத்துக்குச் சென்று அங்கு தரிசித்துவிட்டு இன்று வெள்ளிக்கிழமை காலை வரும்போது பொத்துவில் மற்றும் லாகுகலைக்கிடையிலுள்ள நீலகிரி ஆற்றிலே நீராடியபோது மூழ்கி மரணமானார்.

அவரது சடலம் மேலதிக விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைக்காக லாகுகலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மருத்துவத்துறைக்குத் தெரிவான எஸ்.அக்சயன் நீரில் மூழ்கி இறைபதமடைந்த செய்தி காட்டுத் தீ போல் பரவியது. முழுக் காரைதீவு பிரதேசமே சோகத்தில் மூழ்கியுள்ளது.

### ஆகஸ்ட்டில்...

ஆகஸ்ட் மாதமளவில் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்று ஜனாதிபதியின் ஆலோசகரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆசுமாரசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“இந்தியப் பிரதமரின் பதவியேற்பு நிகழ்வில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியா சென்றிருந்தார். இந்தியா என்பது எமது பெரிய அண்ணன். எனவே, அந்நாட்டுடன் நெருக்கமான உறவைப் பேண வேண்டியது அவசியம்.

இந்தியப் பிரதமர் விரைவில் இலங்கை வரவுள்ளார். திகதி விவரம் இன்னும் உறுதியாகவில்லை. ஆகஸ்ட் மாதமளவில் வருவார் என எதிர்பார்க்கின்றோம்.

ஏனைய அயல் நாடுகளைவிடவும் இலங்கை தொடர்பில் இந்தியா கூடுதல் கரிசனையைக் கொண்டுள்ளது. ஜனாதிபதி ரணிலுக்கு வழங்கப்பட்ட பிரமாண்ட வரவேற்பும், மோடியின் அணுகுமுறையும் இதற்குச் சான்றாகும்.

இலங்கையின் அடுத்த ஜனாதிபதி ரணில்தான் என்பது இந்தியப் பிரதமர் மோடிக்கும் தெரிந்துள்ளது.” – என்றார்.



# உயர்தர தேசிய சாதனையாளர் கல்வியமைச்சில் கௌரவிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு கொழும்பிலுள்ள கல்வியமைச்சில் கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் கல்வியமைச்சின் செயலாளர் திருமதி திலகா ஜயசுந்தர, அமைச்சின் உயர் அதிகாரிகள், அபான்ஸ் வர்த்தக நிறுவன பணிப்பாளர் ரெடி பெக்டோன்ஜி, அபான்ஸ் பிரதம வர்த்தக முகாமையாளர் கலாநிதி சதுர ஜயவர்த்தன, பாடசாலைகளின் அதிபர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

தேசிய ரீதியில் ஒவ்வொரு துறையிலும் முதனிலை பெற்ற மாணவர்களுக்கு அபான்ஸ் நிறுவனத்தால் மடிக்கணனிகள் வழங்கப்பட்டன.







# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## விசாரணை குழு நாடகம்

தென்னாசிய அரசியலில் ஒரு பழக்கம் - வழக்கம் - உண்டு. சர்ச்சைக்குரிய ஒரு விடயத்தை தற்காலிகமாக சமாளிப்பது என்றால் அது பற்றி விசாரிக்கவோ, கையாளவோ அல்லது ஆராய்ந்து பரிந்துரைகளைச் செய்யவோ என்ற பெயரில் ஒரு விசாரணை ஆணைக்குழுவை நியமித்து விடுவதுதான் அது.

அத்தோடு அந்த விவகாரம் கிணற்றில் போட்ட கல்லாகத் தேங்கிப் போகும். ஆரம்பத்தில் ஆரவாரமாக விசாரணைக்கு என்று காலம் இழுபடும். பிறகு இடைக்கால அறிக்கை, நிரந்தர பரிந்துரை என்று விசாரணைக்குழு அறிக்கைக்குக் காலம் பறந்தோடும். பெற்ற அறிக்கையும் வெளிவராது. கிடப்பில் போடப்பட்டு, அதுவும் காணாமல் போகும். பிரச்சினையும் காலம் கடந்து, நலிவுற்று அடங்கிப் போய்விடும்.

இலங்கையில் வருடத்திற்கு இப்படிப் பத்துப் பதினைந்து ஆணைக்குழுக்கள், விசேட ஆணைக்குழுக்கள், விசாரணைஜ் குழுக்கள், செயலணிகள் என்று நியமனமாகி நேரத்தையும் நிதியையும் விழுங்கிப் பின் வீணாகிப் போவது வழமை. 'இலங்கையில் ஆணைக்குழுக்களும் அவற்றின் காலாவதியாகும் தலைவிதியும்' என்ற தலைப்பில் கலாநிதிப் பட்ட ஆய்வு ஒன்று செய்ய முடியும். அத்தகைய நிலைமைதான் இங்கு உள்ளது.

அந்த வரிசையில் இப்போது ஒரு விடயத்தை இழுத்தடிப்பதற்காக மேலும் ஒரு விசாரணைக் குழு நியமிக்கப்பட்டு இருக்கின்றது.

ஆம். 2019 இல் நடந்த ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில்தான் இந்த விசாரணைக் குழு ஓய்வு பெற்ற நீதிபதி ஏ.என். ஜி.டி.அல்விஸ் தலைமையில் நியமிக்கப்பட்டிருக்கின்றது. இந்தத் தாக்குதல் தொடர்பில் முதலில் கிடைத்த புலனாய்வு தகவல்கள், அவை தொடர்பில் அதிகாரிகள் எடுத்த நடவடிக்கைகள் சம்பந்தமாக விசாரிக்கவே இந்தக் குழுவாம்.

ஏற்கனவே இதே விவகாரத்தை ஒட்டிப் பல குழுக்கள் நியமிக்கப்பட்டு, விசாரணைகள் நடந்து, முடிந்து, ஓய்ந்து விட்டன. இப்போது 5 ஆண்டுகள் கழித்து, இந்த வாரத்தில் புதிய விசாரணை குழு முளைத்திருக்கின்றது.

முன்னர் இந்தக் குண்டு தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்வதற்கு அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மூன்று பேர் கொண்ட விசேட விசாரணைக் குழு ஒன்றை நியமித்திருந்தார்.

தவிரவும், இதே விடயத்தை நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று விலாவாரியாக விசாரித்து விவரமான அறிக்கை சமர்ப்பித்திருந்தது.

அதற்கிடையில், ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று இவ்விடயத்தை அத்துபடியாக விசாரித்து ஒரு நீண்ட பரிந்துரை அறிக்கையை சமர்ப்பித்துள்ளது.

போதாக்குறைக்கு இதே விவகாரத்தை ஒட்டிய வழக்கை உயர் நீதிமன்றமும் விசாரித்துத் தீர்ப்பளித்துள்ளது.

இந்த விவகாரத்தில் - முற்கூட்டியே கிடைத்த புலனாய்வுத் தகவல்கள் விடயத்தில் - உரிய முறையில் செயற்படாதமைக்காக நாட்டின் புலனாய்வுச் சேவையினதும் தேசிய புலனாய்வுப் பிரிவினதும் தலைமைகளை வகித்த சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் நிலாந்த ஜெவர்த்தன, ஓய்வு பெற்ற பிரதிப் பொலிஸ்மா அதிபர் சிசர மெண்டிஸ் ஆகியோரை ஏற்பட்ட சேங்களுக்கு நஷ்ட ஈடாக முறையே ஏழரைக் கோடி ரூபாவையும், ஒரு கோடி ரூபாவையும் நஷ்ட ஈடாகச் செலுத்தும்படி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

அதற்குப் பின்னரும் அதே விடயங்களைப் பற்றி - புலனாய்வு தகவல்கள் சரிவரக் கையாளப்பட்டனவா என்பது பற்றி - ஆராய புதிய விசாரணைக் குழு ஒன்றை ரணிலின் அரசு நியமிப்பதாக அறிவிப்பது காலத்தை இழுத்தடிக்கும் ஏமாற்று தந்திரமன்றி வேறில்லை.

இவ்விடயங்களை நன்கு விசாரித்த ஜனாதிபதி ஆணைக்குழு உரிய பரிந்துரைகளைச் செய்துள்ளது. அவற்றை நடைமுறைப்படுத்த இலங்கையின் அரசியல் தலைமைகளுக்கு துணிவும் இல்லை, திராணியும் இல்லை.

அந்தப் பரிந்துரைகளை ஆராய்ந்து தமக்கு வழிகாட்ட என்ற பெயரில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆறு எம்.பிக்கள் கொண்ட குழுவை நியமித்து காலத்தை இழுத்தடித்து விட்டு, அவர் பதவியை விட்டுப் போய்விட்டார்.

அவரது இடத்துக்கு வந்தவர் அந்த பரிந்துரையை நடைமுறைப்படுத்தாமல் தாம் தப்புவதற்காக புதிய விசாரணைக் குழு என்ற நாடகத்தை ஆரம்பித்திருக்கிறார்.

இவ்விடயத்தை ஒட்டி ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை - சிபாரிசுகளை - நடைமுறைப்படுத்தும்படி இத்தாக்குதலில் பெரிதும் பாதிக்கப்பட்ட கிறிஸ்தவ மக்களின் சார்பில் கிறிஸ்தவ திருச்சபை விடாது கோரி வருகின்றது. வலியுறுத்தி நிற்கின்றது.

ஆனால, இலங்கை ஆட்சி தலைமைகளோ விசாரணைக் குழுக்களை மாறி மாறி நியமித்து நாடகமாடுகிறது. பாவம் பாதிக்கப்பட்ட மக்கள். அவர்களுக்கு நீதி கிடைக்கப் போவதில்லை என்பது மட்டும் நிச்சயம்.





# காத்தான்குடியில் 22 இல் பேராளர் மாநாடு; ரவூப் ஹக்கீம் முன்னிலையில் கலந்தாய்வு!

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசியத் தலைவரும் நாடாளு மன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் புத்தளம், பாலாவி, நாகவில்லு பகுதிக ளுக்குத் திடீர் விஜயம் ஒன்றை மேற் கொண்டார்.

பாலாவி நாகவில்லுவில் உள்ள தொழிலதிபர் லாபீர் இல்லத்தில் கட்சி யின் மூத்த உறுப்பினரான ஓய்வு பெற்ற கிராம சேவையாளர் றஹ்மத்துல்லா தலைமையில் இடம்பெற்ற முஸ்லிம் காங்கிரஸ் தலைவருடனான கலந்துரை யாடலில் இவர் கலந்து கொண்டார்.

எதிர்வரும் 22 ஆம் திகதி காத்தான் குடியில் நடைபெறவுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் 31 ஆவது பேராளர் மாநாடு சம்மந்தமாகவும் அதில் புத்தளம் மாவட்டத்தில் இருந்து கலந்து கொள்பவர்கள் மற்றும் அவர்க ளின் வருகை சம்மந்தமாகவும் இதில் பேசப்பட்டது. அத்துடன் புத்தளம் மாவட்டத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங் கிரஸ் கட்சி யின் கிளைகள் புனரமைப்பு, புனர்நிர் மாணம் சம்மந்தமான வேலைத் திட்டங் களை துரிதப்படுத்து மாறும் இதன்போது தலைவரால் வேண்டுகோள் விடுக் கப்பட்டது.

அண்மையில் புத்தளம் மாவட்டத்தில் பெய்த கடும் மழை வெள்ளத்தில் நாக வில்லு பகுதியில் பாதிக்கப்பட்ட சிறு பாலங்களைத் திருத்துவது தொடர்பில் பார்வையிடுவதற்குக் கள விஜயம் ஒன்றையும் தலைவர் மேற்கொண்டார்.

இதன் போது கட்சியின் அரசியல் உயர்பீட உறுப்பினரும் முன்னாள் வடமேல் மாகாண சபை உறுப்பினர் நியாஸ், கட்சியின் அரசியல் உயர்பீட உறுப்பினரும் புத்தளம் பிரதேச சபை வேட்பாளர் லபீர், கட்சியின் இளைஞர் காங்கிரஸ் அமைப்பாளர் அர்ஷாத் , இளைஞர் காங்கிரஸ் முக்கியஸ்தரும் தொழிலதிபருமான இமாந், பாசில் மற் றும் ஏனைய கட்சியின் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.






# இந்தியாவில் இருந்து திரும்பியோரின் பிரச்சினைகள் தொடர்பில் செயலமர்வு

(எஸ்.கீதபொன்கலன்)

அகதிகளாக இந்தியா சென்று, இலங்கைக்குத் திரும்பியவர்களின், காணிப் பிரச்சினை மற்றும் ஏனைய சேவைகளை பெற்றுக் கொள்ளல் தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு திருகோணமலை மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்கள், சர்வதேச புலம் பெயர்வுக்கான நிறுவனம் என்பவற்றின் ஒழுங்கமைப்பில் மாவட்ட அரச அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில், திருகோணமலை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது. இந்தியாவில் இருந்து திரும்பியவர் களின் காணி சம்மந்தமான பிரச்சினை களுக்கான சிறந்ததொரு தீர்வாக இந்தச் செயலமர்வு அமைந் தமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் இருந்து இலங்கைக்குத் திரும்பி வந்தவர்களை, அவர்களுடைய சமூகத்தோடு மீண்டும் ஒருங்கிணைக் கும் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்தச் செயலமர்வு நடத்தப்பட்டது.

இந்தச் செயலமர்வில், மாவட்ட மேல திக அரச அதிபர் எஸ்.சுதாகரன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி கே. விஜயதாசன், பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பொ.தனேஸ்வரன், தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி, ஐ.ஓ.எம். நிறுவன திட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி மயூரன் மேரி லாம்பர்ட், ஐ.ஓ.எம். நிறு வன பொறுப்பாளர் எம்.ஜெயராயன், ஐ.ஓ.எம். நிறுவன ஆலோசகர் என். நிர்த்தனரூபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# திருக்கோவிலில் இரண்டாம் கட்ட அரிசி விநியோகம்

**(வி.ரி.சகாதேவராஜா)**


குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இரண்டாம் கட்ட அரிசி வழங்கும் நிகழ்வு திருக்கோவில் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

.இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக்க அபேவிக்கிரம பிரதம அதிதியாக கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார் .

இதன் போது மாவட்ட மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.



கணனிக் கல்விக்கு தனித்துவம் மிக்க IIS இல் இணைவதன் ஊடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.




Diploma in
Information Technology

NEW INTAKE
07.07.2024
காலை 10:00 மணி

தகவல் தொழில்நுட்ப துறையில் உயர் கல்வி வாய்ப்புக்கள் மற்றும் வேலை வாய்ப்புக்களை எதிர்பார்த்திருக்கும் மாணவர்களுக்கான விசேட கற்கைநெறி.

077 666 0054

*Delivered locally...Recognized globally...*

IIS CITY CAMPUS
NO.655 NAVALAR ROAD , JAFFNA
T.P: 021 222 8060 | EMAIL :info @iis.edu.lk

# கதிர்காமக் காட்டுப்பாதைத் திறப்பு தின குழப்பத்துக்குத் தீர்வு பெற்றுத் தாருங்கள்

## ஜனாதிபதி, ஆளுநரிடம் ஜெயசிறில் வேண்டுகோள்

(வி.ரி.சகாதேவராஜா)

கதிர்காமக் காட்டுப்பாதை திறப்பு தினக் குழப்பத்தைத் தீர்த்து வைக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆகியோரிடம் காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் சமய ஆர்வலருமான கி.ஜெயசிறில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காட்டுப்பாதை திறப்பு தொடர்பாக இரண்டு தினங்கள் ஏலவே அறிவிக்கப்பட்டு தற்பொழுது இறுதியாக ஜுலை இரண்டாம் திகதி திறக்கப்படும் என்று கதிர்காமத்தில் முடிவெடுக்கப்பட்டு இருக்கிறது.

இது வடக்கு, கிழக்கு மாகாணத்தில் இருந்து செல்லும் பாதுகாத்திரீகர்ளுக்கு அறவே பொருந்தாது. 4 நாள்களுக்குள் கொடி ஏற்றத்துக்கு செல்ல முடியாது. பாதை திறந்து வைக்கப்படும் கால அவகாசமும் போதாமல் இருக்கின்றது.

இவ்வாறான செயற்பாடு பாரம்பரிய புனித யாத்திரையை முடக்க திட்டமிட்டுச் செய்யப்படுகிறதோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

எனவே இந்த பாதயாத்திரை பாரம்பரியமாக நிலைத்து பேணும் வகையிலே முறையான தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

அது மாத்திரமல்ல இந்தப் பாத யாத்திரையை வர்த்தமானி பிரகடனம் அறிவித்தல் செய்யப்பட வேண்டும் என்று மேலும் தெரிவித்துள்ளார்.







# வடமேல் மாகாணக் கல்வி மேம்பாட்டுக்காக புதிதாக 4,200 ஆசிரியர்களுக்கு நியமனம்

## நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ஆளுநர் நசீர் அஹ்மட் தெரிவிப்பு

(ரஸீன் ரஸ்மின்)

வடமேல் மாகாணத்தின் கல்வி மேம்பாட்டுக்காக புதிதாக 4 ஆயிரத்து 200 ஆசிரியர்களுக்கு நியமனங்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது என்று மாகாண ஆளுநர் நசீர் அஹ்மட் தெரிவித்தார்.

குருநாகல் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் மற்றும் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சமன்பிரிய ஹேரத் ஆகியோரின் இணைத் தலை மையில் இடம்பெற்ற போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இராஜாங்க அமைச்சர்களாக சாந்த பண்டார, டீ.பி.ஹேரத், நாடாளுமன்ற உறுப்பினர்களான அசங்க நவரத்ன, மஞ்சுளா உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், மாவட்ட அரச அதிபர் ஏக்கநாயக்க உட்பட அரச உயர் அதிகாரிகள், குருநாகல் பிரதிப் பொலிஸ் மா அதிபர் சுஜித் வெதமுல்ல உள்ளிட்ட பாதுகாப்பு தரப்பினர் என பலரும் இதில் கலந்து கொண்டனர்.

இதன்போது கல்வி, சுகாதாரம், நீர்ப்பாசனம், பெருந்தெருக்கள், காணி, வீடமைப்பு, உள்ளிட்ட பல்வேறு துறைகளின் குறைபாடுகள் மற்றும் பிரச்சினைகளுக்குத் துரிதகதியில் தீர்வுகளை வழங்குவது குறித்து ஆராயப்பட்டது.

இங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த ஆளுநர் மேலும் கூறியாவது,

அரசியல் வேறுபாடுகள் மற்றும் அரசியல் சார்பு நிலைப்பாடுகளுக்கு அப்பால் பொது மக்களுக்கு சேவை யாற்ற வேண்டும்.

அத்துடன், பொது மக்களுக்குச் சேவையாற்றும் விடயத்தில் ஏதேனும் சிக்கல்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு அதிகாரியும், எந்த நேரத்திலும் அது தொடர்பில் என்னைச் சந்திக்க வர முடியும். அவ்வாறான சிக்கல்களைத் தீர்த்து வைப்பதற்கு நான் எப்போதும் தயாராக உள்ளேன்.

மாகாணத்தில் வழங்கப்படும் ஆசிரியர் நியமனங்கள் மட்டுமன்றி, சிற்றூழியர் நியமனங்கள் உள்ளிட்ட அனைத்து நியமனங்களின் போதும், குறித்த நியமனங்களைப் பெறுவோர் சிக்கல்கள் இன்றிச் சேவையாற்றுவதற்கான வகையில் அவர்களுக்கான நியமனங்களை வழங்குமாறு அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளேன்.

இலங்கையின் கேந்திர முக்கியத்துவமிக்க இடத்தில் அமைந்துள்ள குருநாகல் மாவட்டம் என்பது மிக எளிதான முறையில் சுற்றுலாப் பயணிகளின் வருகையைப் பெறக் கூடிய இடமாக அமைந்துள்ளது.

குருநாகல் மாவட்டத்தை மாத்திரமன்றி, புத்தளம் உள்ளிட்ட ஒட்டுமொத்த வடமேல் மாகாணத்திலும் சுற்றுலாப் பயணிகளைக் கவரக் கூடிய வகையில் புதிய பொழுதுபோக்கு அம்சங்கள், புதிய பூங்காக்கள் அமைப்பதற்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளேன்.

குருநாகல் மாவட்டத்தில் காசநோய் பரவும் அபாயம் குறித்தும் அதிக கவனத்தை செலுத்தியுள்ளேன்.

காசநோயின் அபாயம் குறித்தும், அதன் பரவலைத்தடுப்பது குறித்தும் மாகாணம் முழுவதும் ஒரே நாளில் விழிப்புணர்வு செயற்பாடுகளை முன்னெடுக்குமாறும் மாகாண சுகாதாரப் பணிப்பாளருக்கு பணிப்புரை வழங்கியுள்ளேன்.– என்றார்.







# கொல்களத்திலிருந்து பசுக்களை மீட்ட பொலிஸ் பொறுப்பதிகாரிக்குப் பாராட்டு!

(த.சுபேசன்)

தென்மராட்சி, மட்டுவில் பகுதியில் இருந்து வடமராட்சி, துன்னாலைப் பகுதிக்குக் கடத்திச் செல்லப்பட்ட பசுக் களை உயிருடன் மீட்டு வந்த சாவகச் சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி பாலித செனவிரட்னவை நேற்று (13) வியாழக்கிழமை சிவசேனை அமைப்பினர் பாராட்டினர்.

அண்மையில் தென்மராட்சி, மட்டு வில் பகுதியில் இருந்து சில பசுக்களைச் சட்டவிரோதமாக இறைச்சியாக்கும் கும்பல் கடத்திச் சென்றிருந்தது.

இந்த நிலையில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை அடுத்து விரைந்து செயற்பட்ட சாவகச்சேரிப் பொலிஸார், வடமராட்சி துன்னாலை காட்டுப் பகுதி யில் இறைச்சி வெட்டும் இடத்தில் இருந்து பசுக்களை மீட்டனர்.

அத்துடன் பிரதான சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்திருந்தனர். இதன்போது சட்டவிரோத கொல்களமும் அடையாளம் காணப்பட்டது.

இந்த நிலையில் பசுவதையைத் தடுத்த சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை சிவசேனை அமைப் பினர் நேரடியாக தேடிச் சென்று பாராட் டினர். இதன்போது சிவசேனை அமைப் பின் தலைவர் மறவன்புலோ சச்சிதா னந்த மும் கலந்துகொண்டார்.



# மன்னார் மடுமாதா திருத்தலத்தின் திருவிழா வரும் 23 இல் ஆரம்பம்!

(மன்னார் லெம்பட், வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மடு திருத்தலத்தின் ஆடி மாத திரு விழா எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆடி மாதம் 2 ஆம் திகதி திருவிழா நிறை வடையும்.

ஒன்பது நாள்கள் நவநாள்களுடன் ஆடி மாதம் 2 ஆம் திகதி பெருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இந்தத் திருவிழாவுடன் மருதமடு அன்னைக்கு முடி சூட்டப்பட்ட தினத்தை முன்னிட்டு யூபிலி விழாவாகவும் இங்கு அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதை முன்னிட்டு அரசியல் தலை வர்கள் மற்றும் பாப்பரசரின் பிரதிநிதி, கருதினால் , ஆயர்கள் உட்பட பல இலட்சம் பக்தர்களும் இவ்விழாவில் கலந்துகொள்ள இருக்கின்றனர்.

இதற்கான முன்னாயத்தக் கலந்து



ரையாடல் கடந்த (11) செவ்வாய்க்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் ஏற்பாட்டில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானு வேல் பெர்னாண்டோ ஆண்டகை தலை மையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

கலந்துரையாடலில் மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார், மடு திருத் தல பரிபாலகர் அருட்தந்தை ஞானப் பிரகாசம் அடிகளார், பிரதேச செய லாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பொலிஸ், கடற்படை மற்றும் ராணுவ உயர் அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது சுகாதாரம், போக்கு வரத்து, குடி தண்ணீர், மின்சாரம், பாதுகாப்பு தொடர்பாக உரிய தரப்புடன் கலந்துரையாடப்பட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# புத்தளம் சென். மேரிஸ் வித்திக்கு தண்ணீர் தாங்கி வழங்கி வைப்பு

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

புத்தளம் சென்.மேரிஸ் தமிழ் மகா வித்தியாலயத்துக்கு சமூக ஆர்வலர் முஜாஹித் நிசாரால் தண்ணீர் தாங்கி வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை (13) இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் அருட்சகோதரி எஸ். ஜெனட் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நீதி அமைச்சின் மத்தியஸ்த சபை ஆணைக்குழு அதிகாரியும், சமூக ஆர்வலருமான முஜாஹித் நிஸார், பிரதேச இணைப்பாளரும், சமூக சேவையாளருமான முஹம்மது சபீர், பாடசாலை உதவி அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்களும் கலந்து கொண்டனர்.

இந்த பாடசாலையில் கடந்த காலத்தில் வழங்கப்பட்ட தற்காலிக வகுப்பறையை புனர் நிர்மாணம் செய்வதற்கான ஆலோசனையும் மேற்கொள்ளப்பட்டது.



# பிரபஞ்சம் வேலைத் திட்டத்தின் கீழ் சுழிபுரம் விக்டோரியாவுக்குப் பஸ்!

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஷவின் பிரபஞ்சம் வேலைத் திட்டத்தின் கீழ், 88 ஆவது கட்டமாக 50 லட்சம் ரூபா பெறுமதியான பஸ் ஒன்று யாழ்ப்பாணம், சுழிபுரம் விக்டோரியா கல்லூரிக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு நேற்று முன்தினம் (12) இடம்பெற்றது.

இதன்போது, பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினருக்கு ஒரு லட்சம் ரூபா நிதியுதவியும் வழங்கப்பட்டது.

76 ஆண்டுகால வரலாற்றில் எதிர்க்கட்சியாக இருந்து, எந்த அரசியல் கட்சியும் செய்யாத பணியை ஐக்கிய மக்கள் சக்தி செய்து வருகிறது.

இந்த நாட்டு எதிர்க்கட்சி அரசியலுக்கு ஐக்கிய மக்கள் சக்தி புதிய கற்பிதங்களைப் போதித்து வருகிறது.

இந்தச் சேவையைக் கண்டு பார்த்துக் கொண்டிருக்க முடியாத கைவாறு அடிக்கும் குழுவொன்று இதனை விமர்சித்து வருகிறது என்று இந்த நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.








# பாடசாலை மாணவிகளுக்கு சுகாதாரப் பொருள் வழங்கல்

(எஸ்.கீதபொன்கலன்)

அண்மையில் ஏற்பட்ட மழை, வெள்ளம் மற்றும் மண் சரிவு அனர்த்தங்களில் பாதிக்கப்பட்ட கேகாலை, களுத்துறை, இரத்தினபுரி மற்றும் காலி மாவட்ட, பாடசாலை மாணவிகளுக்கு சுகாதாரப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

அவர்களின் தேவையைக் கருத்தில் கொண்டு, அகம் மனிதாபிமான வள நிலையம், இந்த மாவட்ட பாடசாலை மாணவிகள் 4 ஆயிரம் பேருக்கு, 64 லட்சத்து 33 ஆயிரத்து 600 ரூபா பெறுமதியான, சுகாதாரப் பொருள்களை வழங்கி வருகிறது.

கிழக்கு மாகாணத்தில், நலிவுற்ற சமூகங்களின் முன்னேற்றத்துக்காகப் பணியாற்றுகின்ற, திருகோணமலையை தளமாகக் கொண்டு செயற்படும்,



தொண்டர் அமைப்பான அகம் மனிதாபிமான வள நிலையம் 'அமெரிக்க யூத உலக சேவை' நிதி நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன், அகம் நிறுவனத்தின் சகோதர அமைப்புக்களான திருகோணமலை மாவட்ட பெண்கள் வலையமைப்பு மற்றும் சூழலியல் நீதிக்கான மக்கள் அமைப்பு ஆகிவற்றுடன் இணைந்து இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுத்து வருகிறது.

இந்தச் சுகாதாரப் பொருள்களின் ஒரு தொகுதி, பாதிக்கப்பட்ட 04 மாவட்டச் செயலகங்களின் அனுமதியுடன் பாடசாலைகளுக்கு வழங்கப்படவுள்ளன.

முதல் கட்டமாக மாத்தறை மாவட்டத்தின் 06 பாடசாலைகளைச் சேர்ந்த, 1000 மாணவிகளுக்கு உரிய சுகாதாரப் பொருள்கள் வழங்கப்பட்டன என்று அகம் அமைப்பின் இணைப்பாளர் க.லவகுகராசா கூறினார்.



# வன்முறை மற்றும் தீவிரவாதப் போக்கை தடுத்தல் தொடர்பில் இளையோர் சந்திப்பு

(எம்.ஏ.ஏ.அக்தார்)

இளைஞர்கள் மத்தியில் வன்முறை மற்றும் தீவிரவாதப் போக்கு சிந்தனைகள் தூண்டப்படுவதில் இருந்து தடுத்தல் எனும் கருப்பொருளிலான செயலமர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

காரைதீவு பிரதேச செயலாளர் திருமதி.ராகுலநாயகி சஜிந்ரனின் வழிகாட்டலில் 'கப்சோ' தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் அனுசரணையில் காரைதீவு பிரதேச செயலக அனர்த்த நிவாரண சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் நெறிப்படுத்தலில் பிரதேச இளைஞர் சேவைகள் மன்ற உறுப்பினர்களை வலுப்படுத்தல் எனும் தொனிப்பொருளுக்கமைவாக இது நடத்தப்பட்டுள்ளது.

இளைஞர்களிடையே வன்முறை, தீவிரவாதத்தைத் தடுக்க போதைப் பொருள் தடுப்பு எனும் தலைப்பிலான விரிவுரையை தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபையின் வடகிழக்கு மாகாண ஒருங்கிணைப்பாளர் எம்.எம்.ஜீ.பீ.எம். றஷாட் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்ச்சியில் காரைதீவு பிரதேச செயலக அனர்த்த நிவாரண சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர், உளவளத்துணை உத்தியோகத்தர், இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் மற்றும் 'கப்சோ' மாவட்ட செயற்றிட்ட ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.




# கல்வி இராஜாங்க அமைச்சர் ரஷ்ய நாட்டு மாநாட்டில் பங்கேற்பு

தற்போது ரஷ்ய நாட்டின் கசான் நகரில் கல்வி அமைச்சர்களுக்கான "எதிர்காலத்தை செப்பனிடல்" என்ற தொனிப் பொருளில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மாநாட்டில் கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் கலந்து கொண்டுள்ளார்.

இந்த நிகழ்வின் போது ரஷ்ய நாட்டின் கல்வி அமைச்சர் சேர்கி க்ரவுத்சோ, இலங்கைக் கல்வி இராஜாங்க அமைச்சருக்கு கைலாகு கொடுத்து வரவேற்றார்.



# விவசாயிகளது பொறி வலைகளால் வன விலங்குகளுக்கு அச்சுறுத்தல்

## வனவிலங்கு அதிகாரிகள் தெரிவிப்பு

(மஸ்கெலியா )

மலையக பகுதிகளில் மரக்கறி பயிர்கள் மற்றும் ஏனைய பயிர்களை பாதுகாக்க சில விவசாயிகள் பயன்படுத்தும் பல்வேறு வகையான பொறி வலைகளால் வன விலங்குகளின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று வனவிலங்கு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மலையக விவசாயிகள் வன விலங்குகளிடம் இருந்து பயிர்களை பாதுகாக்க பல்வேறு யுக்திகளை கையாள்வதும் சிலர் குறைந்த விலையில் வலைகள் மற்றும் பல்வேறு வகையான பொறி மீன் பிடி வலைகளை பயன்படுத்துவதையும் அவதானிக்க முடிகிறது.

இவ்வாறான வலைகளில் வன விலங்குகள் சிக்குகின்றன. அவற்றில் சில உயிர் இழக்கின்றன. மற்றும் பல பலத்த காயம் அடைவது, கைகால் முறிவு போன்ற பேர் இடர்களுக்கு உட்படுகின்றன.

இதைவிட சில விவசாயிகள் வலையில் சிக்கும் வன விலங்குகளை ஏனைய விலங்குகள் கொன்று உண்பதும் இடம்பெறுகின்றன.

அதுமட்டுமன்றி இறைச்சிக்காகச் சில விலங்குகளை வெட்டுகின்றனர் என்றும் வனவிலங்கு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மலையகப் பகுதிகளில் விலங்குகளை வேட்டையாட பொதுவாகப் பயன்படுத்தப்படும் கம்பி வலைகள், ஹூக்கா டேப்கள் போன்றவற்றைப் பயன்படுத்துவோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளனர்.

பொறி மற்றும் வலைகளை கொண்டு வேட்டை ஆடுவது பாரிய குற்றச் செயல் ஆகையால் இவ்வாறு குற்ற செயல்களில் ஈடுபட்டு வரும் நபர்கள் தொடர்பில் அருகில் உள்ள வன பாதுகாப்பு அதிகாரிகள் கவனத்துக்குக் கொண்டு வருமாறு வன பாதுகாப்பு அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



# டிஜிட்டல் ஊடகத்தின் முக்கியத்துவம் தொடர்பில் கொழும்பில் செயலமர்வு



(நூருல் ஹுதா உமர்)

'டிஜிட்டல் ஊடகத்தின் முக்கியத்துவம்' எனும் தொனிப்பொருளில் டிஜிட்டல் ஊடகம் மற்றும் இதழியல் கல்வி நிறுவனம் ஏற்பாடு செய்த செயலமர்வு கொழும்பு 07, நியூ டவுன் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் தலைமை அதிகாரியுமான சாகல ரத்நாயக்க பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர் ஐ.ஏ.கலீலுர் ரஹ்மான் அந்த நிறுவனத்துடன் இணைந்து எதிர்கால மாணவ சந்ததிகளுக்காக தொடர்ந்து ஆற்றி வரும் பங்களிப்பிற்காக டிஜிட்டல் ஊடகம் மற்றும் பத்திரிகை கல்வி நிறுவனத்தால் இதன்போது கௌரவிக்கப்பட்டார்.

# பாக்கு நீரிணையை நீந்திக் கடக்கவுள்ள சிறுவனுக்கு வாழ்த்துக் கூறினார் ரிஷாத்!

(எம்.எப்.றிபாஸ்)

இந்தியா, இராமேஸ்வரம், தனுஷ்கோடியில் இருந்து தலை மன்னார் வரையிலான, 32 கிலோ மீற்றர் நீளமான பாக்கு நீரிணையை நாளை (15) நீந்திக் கடந்து, உலக சாதனை படைக்கவுள்ள சிறுவன் ஹஸன் ஸலாமாவுக்கு, மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை, ஜமாலியாவில் உள்ள சிறுவன் ஸலாமாவின் இல்லத்துக்கு நேரில் விஜயம் செய்த ரிஷாட், சிறுவனை வாழ்த்தியதோடு, பரிசுத் தொகை ஒன்றையும் வழங்கி வைத்தார்.

இதன்போது, மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் பிரதியமைச்சருமான அப்துல்லாஹ் மஹ்ரூப் மற்றும் கட்சியின் உயர்பீட உறுப்பினர்களான டாக்டர் ஹில்மி மொஹிடீன், தௌபீக் ஆகியோரும் சென்றியிருந்தனர்.








# பருத்தித்துறை நகரசபையினரால் மின்னியல் நூலகம் திறந்து வைப்பு

வடமராட்சி பருத்தித்துறை நகர சபையால் மின்னியல் நூலகம் ஒன்று நேற்று வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தேசிய நூலகங்கள் மற்றும் ஆவண சேவைகள் சபை தலைவர் பேராசிரியர் நந்த தர்மரட்ண இந்த நிகழ்வில் கலந்து கொண்டு நூலகத்தைத் திறந்து வைத்தார்.

பருத்தித்துறை நகரசபை செயலாளர் திருமதி கே.தாரணி தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் முதல் நிகழ்வாக விருந்தினர்கள் மலர் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டு விழா மண்டபம் வரை அழைத்துவரப்பட்டனர்.

சிறுவர் மின்னியல் நூலகம் உட்பட மூன்று மின்னியல் நூலக தொகுதிகளும் நிகழ்வின் பிரதம விருந்தினர் தேசிய நூலகங்கள் மற்றும் ஆவண சேவைகள் சபை தலைவர் பேராசிரியர் நந்த தர்மரட்ணவால் முன்னாள் பருத்தித்துறை நகரசபை தவிசாளர்கள், அதிகாரிகளுடன் இணைந்து திறந்து வைக்கப்பட்டது.

தொடர்ந்து அரங்கத்தில் நிகழ்வுகள் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமானது.

மங்கல சுடர்களை தேசிய நூலகங்கள் மற்றும் ஆவண சேவைகள் சபை தலைவர் பேராசிரியர் நந்த தர்மரட்ண, தேசிய நூலகங்கள் மற்றும் ஆவண சேவைகள் சபை தலைவர் பேராசிரியர் நந்த தர்மரட்ண, தேசிய நூலகங்கள் மற்றும் ஆவண சேவைகள் சபை பணிப்பாளர் டபிள்யூ சுனில், யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பி.சிறிவரன் முன்னாள் தவிசாளர்களான யோசப் இருதயராசா, வெ. நவரட்ணம், நகரசபை செயலாளர் திருமதி தாரணி ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து வரவேற்புரை இடம் பெற்றது. அதனை தொடர்ந்து மின்னியல் நூலக அங்கத்தவர்களுக்கான இலவச அங்கத்துவ அட்டைகள் வழங்கி வைக்கப்பட்டன.

மின்னியல் நூலகத்தில் கணனி பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு விருந்தினர்களால் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

தொடர்ந்து கருத்துரைகளைத் தேசிய நூலகங்கள் மற்றும் ஆவண சேவைகள் சபை தலைவரும் நிகழ்வின் பிரதம விருந்தினருமான பேராசிரியர் நந்த தர்மரட்ண, சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தேசிய நூலகங்கள் மற்றும் ஆவண சேவைகள் சபை பணிப்பாளர் டபிள்யூ சுனில், கௌரவ விருந்தினராக கலந்து கொண்ட யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பி சிறிவரன் ஆகியோர் நிகழ்த்தினர்.










# குவைத் தீவிபத்தில் பலியான இந்தியர்களின் உடலங்கள் கொச்சிக்கு எடுத்து வரப்பட்டன

## 7 தமிழரின் சடலங்கள் தனித் தனி வாகனங்களில் சொந்த ஊர்களுக்கு

கொச்சி,ஜூன் 14

குவைத் தீவிபத்தில் பலியான இந்தியர்களின் உடல்கள் கொச்சி கொண்டு வரப்பட்டன.

தமிழ்நாடு, கேரளா, கர்நாடக மாநிலங்களில் இருந்து வருகை தந்து உடல்களை பெற்றுச் செல்ல பலியானவர்களின் உறவினர்கள் சோகத்துடன் காத்திருந்தனர்.

குவைத்தின் மங்காப் பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீ விபத்தில் 49க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். 50க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இவர்களில் 45 பேர் இந்தியர்கள் என்பது தெரியவந்தது. இதில் கேரளாவை சேர்ந்த 24 பேர், தமிழ்நாட்டைச் சேர்ந்த 7 பேர் அடையாளம் காணப்பட்டனர்.

அவர்கள் 31 பேரின் உடல்கள் இந்திய விமான படை விமானம் மூலம் கொச்சிக்குக் கொண்டு வரப்பட்டன.

விமான நிலையத்திற்கு வந்த கேரள முதல்-மந்திரி பினராயி விஜயன், மத்திய மந்திரி சுரேஷ் கோபி, தமிழக அமைச்சர் செஞ்சி மஸ்தான் உள்பட உயர் அதிகாரிகள் 31 பேரின் உடல்களுக்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

இந்தச் சம்பவத்தில் உயிர் இழந்தவர்களில் 45 பேர் இந்தியர்கள் ஆவர்.




அதில் கேரளாவை சேர்ந்த 24 பேர், தமிழ்நாட்டை சார்ந்த 7 பேர் மற்றும் டெல்லி உள்பட மற்ற மாநிலங்களை சேர்ந்தவர்கள் 14 பேர் ஆவர்.

தீவிபத்தில் உயிரிழந்த 7 தமிழர்களின் உடல்களை கொச்சியில் வைத்து அமைச்சர் செஞ்சி மஸ்தானிடம் அதிகாரிகள் ஒப்படைத்தனர்.

கொச்சியில் இருந்து உயிரிழந்தவர்களின் சடலங்கள் அவரவர் சொந்த ஊர்களுக்கு தனி வாகனம் மூலம் அனுப்பி வைக்கப்பட இருந்தன.

உயிரிழந்த இந்தியர்களின் உடல்களை மீட்டு, தாயகத்துக்கு அனுப்பி வைக்கும் பணிகளை துரிதப்படுத்த வெளியுறவுத் துறை இணை மந்திரி கீர்த்திவர்தன் சிங், துறை அதிகாரிகள் நேற்று குவைத் சென்றனர். பலியான இந்தியர்களின் உடல்கள் அடையாளம் காணப்பட்டு தாய்நாட்டிற்கு எடுத்து வரும் நடவடிக்கைகள் முழு வீச்சில் நடைபெற்றன. இந்தியர்களின் உடல்களை எடுத்து வர விமானப்படைக்கு சொந்தமான சி 130 என்ற விமானம் நேற்று குவைத் சென்றது.

இந்த நிலையில், குவைத் தீ விபத்தில் பலியானவர்களின் உடலை எடுத்துக் கொண்டு விமானம் கொச்சி வந்தடைந்தது.



# அமெரிக்கா - உக்ரைன் பாதுகாப்பு உடன்படிக்கை

ரோம்,ஜூன்14

அமெரிக்கா - உக்ரைன் ஆகிய இரு நாடுகளுக்குமிடையே 10 ஆண்டுகளுக்கு பாதுகாப்பு ஒப்பந்தம் கையெழுத்தானது. அமெரிக்க அதிபர் ஜோ பைடனும், உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியும் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.

எதிர்காலத்தில் உக்ரைன் மீது ரஷ்யா ஆயுத தாக்குதல் நடத்தினால் அமெரிக்காவும், உக்ரைனும் 24 மணி நேரத்திற்குள் உயர்மட்ட அளவில் ஆலோசனை நடத்தி முடிவு எடுக்க வேண்டும் என புதிய ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி, கனடா, ஜப்பான் ஆகிய முன்னேறிய நாடுகள் கொண்ட ஜி-7 அமைப்பின் உச்சிமாநாடு இத்தாலியில் நேற்று தொடங்கியது. மாநாட்டில் சிறப்பு அழைப்பாளராக உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியும் பங்கேற்றார்.

நேற்று அவர் அமெரிக்க அதிபர் ஜோ பைடனை சந்தித்து இரு தரப்பு உறவுகள் மற்றும் ஒத்துழைப்பு தொடர்பாக பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்பின்போது இரு நாடுகளுக்குமிடையே 10 ஆண்டுகளுக்கு பாதுகாப்பு ஒப்பந்தம் கையெழுத்தானது. அமெரிக்க அதிபர் ஜோ பைடனும், உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியும் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.




இந்த ஒப்பந்தத்தின்படி, அடுத்த 10 ஆண்டுகளுக்கு உக்ரைனுக்கு பல்வேறு வகையில் இராணுவ உதவி மற்றும் இராணுவப் பயிற்சியை அமெரிக்கா வழங்கும்.

ரஷ்யாவின் படையெடுப்புக்கு எதிராகப் போராடி வரும் உக்ரைனுக்கு இந்தப் பாதுகாப்பு ஒப்பந்தம் வரலாற்று சிறப்பு வாய்ந்தது என உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி தெரிவித்தார். அத்துடன், நேட்டோ அமைப்பில் இணைவதற்கான முயற்சியில் தனது நாட்டிற்கு இது ஒரு பாலமாக செயல்படும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

எதிர்காலத்தில் உக்ரைன் மீது ரஷ்யா எந்தவிதமான ஆயுத தாக்குதலை நடத்தினாலும், அமெரிக்காவும், உக்ரைனும் 24 மணி நேரத்திற்குள் உயர்மட்ட அளவில் ஆலோசனை நடத்தி முடிவு எடுக்கவேண்டும் என புதிய ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. உக்ரைனின் ராணுவத்தை சிறப்பாக கட்டமைக்கவும், பயிற்சியில் ஒத்துழைக்கவும் உக்ரைனின் உள்நாட்டு ஆயுத தொழிற்சாலையை உருவாக்கவும் இந்த ஒப்பந்தத்தில் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் ஜி7 மாநாட்டின் இடையே, உக்ரைனுடன் ஜப்பானும் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.



# நேபாளத்தில் நிலச்சரிவில் சிக்கி ஒரே குடும்பத்தில் நால்வர் மரணம்

காத்மாண்டு,ஜூன்14

நேபாளத்தில் கடந்த திங்கட்கிழமை பருவமழை தொடங்கி, பரவலாக மழை பெய்து வருகிறது. குறிப்பாக, கிழக்கு நேபாளத்தில் கனமழை பெய்து வருகிறது. தப்லேஜங் மாவட்டம் பக்டாங்லங் ஊரக நகராட்சி பகுதியில் நேற்று இடைவிடாமல் மழை பெய்த நிலையில், நேற்று இரவு நிலச்சரிவு ஏற்பட்டது. நிலச்சரிவின் இடிபாடுகளில் 2 வீடுகள் புதைந்தன.

இதில் ஒரு வீட்டில் இருந்த கணவன், மனைவி மற்றும் அவர்களின் இரண்டு மகள்களும் உயிரிழந்தனர். அவர்களின் உடல்கள் இன்று மீட்கப்பட்டன. அந்த குடும்பத்தினரின் சுமார் 50 ஆடுகள் மற்றும் ஏராளமான கோழிகளும் நிலச்சரிவில் சிக்கி இறந்துவிட்டன.

மற்றொரு வீட்டில் இருந்தவர்களின் நிலை என்ன என்பது தெரியவில்லை. அவர்களை தேடும் பணி நடைபெற்று வருகிறது.

நேபாளத்தில் ஒவ்வொரு ஆண்டும் பருவமழை காலத்தில் மழையால் பேரழிவுகள் ஏற்படுகின்றன. இந்த ஆண்டு சுமார் 18 லட்சம் மக்கள் பாதிக்கப்படலாம் என அதிகாரிகள் கணித்துள்ளனர்.

கனடா முரசு

பக்கங்கள் - 5

வெள்ளிக்கிழமை 14/06/2024

## உக்ரைனுக்கு கனடா அரசு 5 பில்லியன் டொலர் கடன்

ஒன்ராரியோ, ஜூன் 14

கனடிய அரசாங்கம் உக்ரைனுக்கு 5 பில்லியன் டொலர்களை கடனாக வழங்கத் தயாராக உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. C2 ▶



# ரஷ்யா மீது கனடா புதிதாக தடைகள்

**ரஷ்யாவிற்கு எதிராகக் கனடிய அரசாங்கம் புதிய தடைகளை அறிவித்துள்ளது.**

**ரஷ்யாவின் இராணுவ, தொழில் துறைகளை குறிவைக்கும் வகையில் இந்தப் புதிய பொருளாதார தடைகள் அமைகின்றன.**

**இந்த புதிய பொருளாதாரத் தடை அறிவித்தல் ரஷ்யாவின் சட்டவிரோதப் போரை சீர்குலைக்கும் கனடாவின் நீண்டகால முயற்சிகளை பிரதிபலிக்கிறது என கனடிய வெளிவிவகார அமைச்சர் மெலானி ஜொலி தெரிவித்துள்ளார்.**

இத்தாலியில் நடைபெறும் ஜி7 உச்சி மாநாட்டில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கலந்து கொண்டுள்ள நிலையில், இந்தத் தடை அறிவித்தல் வெளியானது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு ஜி7 உச்சி மாநாட்டில் ஒரு முக்கிய விவாதப் பொருளாக உள்ளது.

கனடிய அரசாங்கத்தின் தடைகள் தனி நபர்களையும் நிறுவனங்களையும் குறிவைக்கின்றன.

ரஷ்ய இராணுவத்திற்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்கும் நிறுவனங்களும் தடைப் பட்டியலில் இடம் பிடித்துள்ளன.

அதேவேளை ரஷ்யா அதன் அண்டை நாடான மால்டோவாவின் தேர்தல்களில் செல்வாக்குச் செலுத்த முயல்வதாகவும் கனடா குற்றம் சாட்டுகிறது.

# கடந்த வருடமே பதவி விலக எண்ணியிருந்தாராம் ட்ரூடோ

## ‘ரீதிங்கிங்’ நிகழ்ச்சியில் அவரே தகவல்

**ஒன்ராரியோ, ஜூன் 14**

கடந்த வருடம் பதவி விலகுவது குறித்து தாம் எண்ணியதாக பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

திருமண உறவின் பிரிவின் போது தமக்கு இந்த எண்ணம் இருந்ததாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

பிரபல உளவியலாளர் எடம் கிரான்ட் நடத்தும் ‘ரீதிங்கிங்’ எனப்படும் இணைய பொட்காஸ்ட் நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு உரையாடிய போதே பிரதமர் இந்த விவரத்தை வெளியிட்டுள்ளார். C2 ▶





# யூத சமூகத்திற்கு செய்த துரோகத்திற்காக லிபரல் கட்சிக்கு எதிராக வாக்களியுங்கள்!

## டொரன்டோ சென் போல்ஸ் இடைத் தேர்தலில் கன்சர்வேட்டிவ் கோரிக்கை

**ஒன்ராரியோ, ஜூன் 14**

டொரன்டோவின் சென் போல்ஸ் பகுதியில் நடைபெறவுள்ள இடைத் தேர்தலில் லிபரல் கட்சிக்கு எதிராக வாக்களித்து, யூத சமூகத்திற்கு செய்த துரோகத்திற்கு பிரதமருக்கு செய்தி யனுப்புமாறு கன்சர்வேட்டிவ் கட்சியினர் கோரியுள்ளனர்.

நீண்ட கால லிபரல் நாடாளுமன்ற உறுப்பினரான கரோலின் பென்னட் டின் ஓய்வைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கான இடைத்தேர் தல் எதிர்வரும் 24ஆம் திகதி நடை பெறவுள்ளது.

இந்தத் தேர்தல் பிரசாரத்திற்காக கன்சர்வேட்டிவ் கட்சியினரால் யூத இல்லங்களை இலக்கு வைத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் ஹமாஸ் – இஸ்ரேல் யுத்தத்தினைத் தொடர்ந்து கனடாவில் அதிகரித்துள்ள யூத எதிர்ப்பு சூழ்நிலைக்கு அரசாங்கம் அமைதி காப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யூத தொழில்களையும், சமூகங்க ளையும் வன்முறையில் இருந்து காப் பதற்கு அரசாங்கம் தவறியுள்ளதாக வும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

90களில் இருந்து லிபரல் கட்சியின் ஆசனமாக கருதப்படும், சென் போல்ஸ் ஆசனத்தை தக்க வைத்துக் கொள்வது லிபரல் கட்சியினருக்கு மிகவும் முக்கிய மான அரசியல் செயல்பாடாக இருக்கப் போகின்றது.

# சந்தேக நபர் ஒருவருக்கு கனடாவில் பிடிவிறாந்து



கனடாவில் சந்தேக நபர் ஒருவருக்கு எதிராக நாடு தழுவிய பிடிவிறாந்து உத் தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நபர் ஒட்டாவா மற்றும் றொறன்ரோவில் அதிகளவில் தங்கி யிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

29 வயதான கெரி பிரின்ஸ் என்ற சந்தேக நபரையே பொலிஸார் தேடி வருகின்றனர்.

ஒருநாள் பரோலில் விடுவிக்கப்பட்ட நபர் நிப்தனைகளை மீறினார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வீடு உடைப்பு, சொத்து கொள்ளை உள்ளிட்ட சில குற்றச்சாட்டுக்கள் இவர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

ஆறு அடி உயரமான கறுப்பின சமூகத்தைச் சேர்ந்த ஆண் ஒருவரையே தாங்கள் தேடி வருகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபரை கைது செய்வதற்கு உதவுமாறு பொலிஸார் பொதுமக்க ளிடம் கோரியுள்ளனர்.

### உக்ரைனுக்கு...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜி7 நாடுகளின் தலைவர்கள் இத் தாலியில் சந்திக்கவுள்ள நிலை யில் இந்தத் தகவல் வெளியாகியுள் ளது.

இத்தாலியில் நடைபெறும் ஜி7 தலை வர்கள் உச்சி மாநாட்டின் முதல் நாளில் இந்தத் தகவல் வெளியானது.

உக்ரைனுக்கு கடனாக 5 பில்லியன் டொலர்களை வழங்க கனடா தயாராக இருப்பதாக அரசாங்கத்தின் மூத்த அதி காரி ஒருவர் தெரிவித்தார்.

ஜி7 தலைவர்கள் இந்த கடன் குறித்து கலந்துரையாடுவதாக அந்த அதிகாரி கூறினார்.

கனடா, அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான் ஆகிய ஜி7 நாடுகளின் தலைவர்கள் இத்தாலியில் சந்திக்கின்றனர்.

ஜி7 தலைவர்களின் உச்சி மாநாட்டில் கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ உக்ரைன் ஜனாதிபதியைச் சந்திக்க ஏற்பாடாகியுள்ளது.

### கடந்த வருடமே...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கத்தின் மீதான மற்றும் தம் மீதான கனடியர்களின் விமர்சனங்களை அவர் எவ்வாறு எதிர் கொள்கிறார் என இதன்போது கிரான்ட் பிரதமரிடம் கேள்வி எழுப்பினார்.

இந்த கேள்விக்குப் பதிலளிக்கும் போது அண்மைக்காலத்தில் தமது செல்வாக்கு குறைந்து செல்வதனை அவர் ஒப்புக் கொண்டுள்ளார்.






# ஒன்ராரியோ, கியூபெக்குக்கு சூறாவளி எச்சரிக்கை விடுப்பு

ஒன்ராரியோ, ஜூன் 14

ஒன்ராரியோ மற்றும் கியூபெக் மாகாணங்களுக்கு சூறாவளி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கியூபெக் மாகாணத்தின் தென் மேற்கு, மத்திய பகுதிகளில் ஜூன் 13ஆம் திகதி கடுமையான இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என எச்சரிக்கப் பட்டிருந்தது.

சுற்றுச்சூழல் கனடாவினால் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனால் ஒன்ராரியோ மாகாணத்தின் ஒட்டாவா, பெம்புரோக், நோர்த் பே நகரங்களிலும் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என எச்சரிக்கப்படுகிறது.




# போதையில் வாகன விபத்தை ஏற்படுத்திய பொலிஸ் அலுவலர் பதவி இறக்கப்பட்டார்

கனடாவின் டர்ஹம் பகுதியில் குடிபோதையில் வாகன விபத்தை ஏற்படுத்திய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பதவி இறக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பொலிஸ் அதிகாரி வகித்து வந்த பதவி நிலையிலிருந்து ஓராண்டு காலம் தரமிறக்கப்பட்டுள்ளார்.

இந்த பொலிஸ் அதிகாரி கடந்த 17 ஆண்டுகளாக சேவையில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பொலிஸ் அதிகாரியின் ஓட்டுனர் உரிம் ஓராண்டுக்கு இடைநிறுத்தப் படுவதுடன் 2,500 டொலர்கள் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

போல் ட்விடி என்ற பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு தண்டிக்கப்பட்டுள்ளார்.



# தெரிந்தே வெளிநாட்டு அரசுகளுக்கு சில எம்.பிக்கள் உதவியிருக்கின்றனர்

## ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விசனம்

ஒன்ராரியோ, ஜூன் 14

பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாட்டு அரசாங்கங்களுக்கு அறிந்தே உதவியுள்ளனர் எனப் புதிய ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜக்மீத் சிங் தெரிவித்துள்ளார்.

தேசியப் பாதுகாப்பு மற்றும் புலனாய்வு குழுவினால் வெளிநாட்டுத் தலையீடு தொடர்பில் அண்மையில் வெளியாகியுள்ள அறிக்கையை வாசித்த தன்பின்னர்தாம்மிகுந்தகவலைகொண்டார் என அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் செனட் சபை உறுப்பினர்களைக் கொண்ட குழுவினால் கடந்த வாரம் வெளியிடப்பட்ட அறிக்கையில் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாட்டு அரசாங்கத்தின் நலனுக்காக செயற்பட்டனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

# வெளிநாடுகளின் தலையீட்டை எதிர்க்கும் சட்டம் நிறைவேற்றம்

**ஒன்ராரியோ, ஜூன் 14**

கனடிய அரசியலில் வெளிநாடுகளின் தலையீட்டை எதிர்க்கும் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

சி-70 சட்டமூலம் எனப்படும் இந்தச் சட்டமூலம் கனடிய அரசியலில் வெளிநாடுகளின் தலையீட்டை எதிர்க்கும் வகையில் அமைந்துள்ளது. எதிர்க்கட்சிகள், கன்சர்வேட்டிவ், புதிய ஜனநாயகக்கட்சி இந்த சட்டமூலத்தை ஆதரிக்கின்றன. இந்த சட்டமூலம் செனட் சபையின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.






# கியூபா அருகே ரஷ்யப் போர்க் கப்பல்கள் உன்னிப்பாகக் கண்காணிக்கிறது கனடா

ஒன்றாரியோ, ஜுன் 14

கியூபாவிற்கு அருகே உள்ள ரஷ்ய போர்க் கப்பல்களை கண் காணித்து வருவதாக கனடிய தேசிய பாதுகாப்பு துறை உறுதிப்படுத்தியுள் ளது.

கியூபா கடற்பரப்பை ரஷ்ய போர்க் கப்பல்கள் ஜுன் 12ஆம் திகதி சென்ற டைந்தன.

இந்தக் கப்பல்களின் செயல்பாடு களை கனடிய ஆயுதப்படைகள் கண் காணித்து வருவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

வட அமெரிக்காவை பாதுகாக்கும் செயல்முறையின் ஒரு பகுதியாக இந்தக் கண்காணிப்பு அமைகிறது என கனடிய தேசிய பாதுகாப்பு துறை தெரிவித்துள்ளது.

# போலி ‘பார்க்கிங் டிக்கட்’ கல்கரியில் எச்சரிக்கை!

கனடாவின் கல்கரி பகுதி யில் போலி பார்க்கிங் டிக்கட் தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

கல்கரி வாகனத் தரிப்பு அமைப்பு இது தொடர்பில் எச்சரிக்கை விடுத் துள்ளது.

சில மோசடிகாரர்கள் போலி பார்க் கிங் டிக்கட்களை அச்சிட்டு ஏமாற்று வேலையில் ஈடுபட்டுள்ளனர் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் மக் கள் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டு மேன அறிவுறுத்தப்பட்டுள்ளது.

போலி பார்க்கிங் டிக்கட் கிடைக்கப் பெற்றால் அதனை உடனடியாக அழித்து விடுமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ள எந்த வொரு வழிகாட்டல்களையும் பின் பற்ற வேண்டாம் எனவும் அறிவுறுத் தப்பட்டுள்ளது.

போலிபார்க்கிங்டிக்கட்என்றசந்தே கம் எழுந்தால் 403-537-7000 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு உறுதி செய்து கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட் டுள்ளது.

வாகனம் தரித்தல் தொடர்பான விதி மீறல்களில் ஈடுபடுவோருக்கு இவ்வாறு பார்க்கிங் டிக்கட் வழங்கப் படுகின்றது.

போலியான குறுஞ்செய்திகளை அனுப்பி தண்டப் பணம் அறவீடு செய்ய முயற்சிப்பதாகத் தெரி விக்கப்படுகின்றது.




# டொரன்டோ பஸ்ஸில் கத்திக்குத்துச் சம்பவம்

டொரன்டோவின் பஸ் ஒன்றில் கத்திக்குத்து தாக்குதல் இடம்பெற் றுள்ளது.

இந்த தாக்குதல் சம்பவத்தில் இரண்டு பேர் காயமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ரீ.ரீ.சீ போக்குவரத்து சேவையின் பஸ் ஒன்றில் பெரி மற்றும் பார்க் லொவன் வீதிகளுக்கு அருகாமையில் இந்தச்




சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பஸ்ஸில் இரண்டு ஆண்களுக்கு இடையில் வாக்கு வாதம் ஏற்பட்டதாகவும் பின்னர் இருவரும் ஒருவரை ஒருவர் கத்தியால் குத்திக் கொண்டனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்த ஒருவர் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார் எனத் தெரி விக்கப்படுகின்றது.

மோதிக் கொண்டவர்கள் ஒருவருக்கு ஒருவர் நன்கு தெரிந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.